DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 508/2025

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஜெயப்பிரியா |
| Father / Husband Name | சுகுமாறன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 05.05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் மருத்துவமனையில் கடந்த 29.12.2024 ம் தேதி பணிபுரிந்த மருத்துவர் பிரியா நந்தினி என்பவரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். தற்போது அவர் பணியிட மாறுதல் ஆகி சென்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 29.12.2024 ம் தேதி இரவு 9.00 மணிக்கு மருத்துவர் பிரியாநந்தினி பணியில் இருந்தபோது தனசேகர் என்பவர் இரவு 9.00 மணிக்கு தன்னை தெரிந்த ஒரு நபர் வீட்டின் அருகே தாக்கியதாக சிகிச்சைக்கு வந்த நபரை அவர் பரிசோதித்தபோது அவருக்கு பின்மண்டையில் 5x2x1cm அளவுள்ள கிழிந்த காயமும், வலது கையில் பல கிழிந்த காயங்களும் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொர்ப காயம் என்று சான்று வழங்கினார். **(மருத்துவர் பிரியாநந்தினி தனசேகருக்கு வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்து பதிவேட்டில் பாதிக்கப்பட்ட நபர் எப்போது மருத்துவமனைக்கு வந்தார் என்ற நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் அவர் எவ்வாறு தாக்கப்பட்டார் என்ற விவரமும் இல்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் சம்பவம் 6.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் அவரது வீட்டின் அருகே நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக அ.சா.ஆ.4 ல் கண்ட காயங்கள் வாகன விபத்தின்போது ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட நபர் எவ்வளவு நாள் சிகிச்சை எடுத்தார் என்ற விவரம் அ.சா.ஆ.4 ல் இல்லை என்றால் சரிதான்.